

நகர் ஊரமைப்பு துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

கொளத்துப்பாளையம் பேரூராட்சி

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி, ஆலாம்பாளையம் கிராமம், க.ச.எண்கள்:2493/1,2A-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண்: RZY7506G/2025 (திட்டமில்லாப்பகுதி)

அளவு : 1: 500 (1செ.மீ = 5மீ)

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 2.22 ½ ஏக்கர் (அ) 9009.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 31

மனைப்பிரிவின் எல்லை.....

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை.....

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை):

I. மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 2410.55 ச.மீ

II. பூங்கா

(i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு)X10%
: (9009.00 - 2410.55) X 10% = 659.85ச.மீ

(ii) ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு : 659.85 ச.மீ -க்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டுத் தொகையை உரிய அரசு வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார்.

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை நீங்கலாக 1%)

(A) LOCALBODY-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9009.00 - 2410.55) X 0.5% = 33.00ச.மீ (0.50%)

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 73.16ச.மீ (1.11%)

(B) TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9009.00 - 2410.55) X 0.5% = 33.00ச.மீ (0.50%)

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 147.78ச.மீ (2.24%)

மூலை முடக்கு : 12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.00மீ முதல் 30.50மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

கட்டிட வரம்பு : 9.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசானை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ஆயு-1) நாள்:14.02.2019 மற்றும் அரசானை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள் பூங்கா மற்றும் LOCALBODY பொதுஉபயோகம் ஒதுக்கீடு மற்றும் TANGEDCO பொதுஉபயோகம் ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு அல்லது TANGEDCO-க்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. அரசானை எண்: 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020 மற்றும் அரசாணை எண்:141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலைத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும். எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால். மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ X 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப் படவேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர், உத்தேச சாலைகளின் தரம் குறித்து ஊராட்சி ஒன்றிய பொறியாளரிடமிருந்து தகுதிச் சான்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

SWP / DTCP / TIRUPPUR / LAYOUT APPROVAL NO : 165/2025

சி.பார்வதி
திட்ட உதவியாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tiruppur
Date:2025.09.25 18:31:10

Signature Not Verified
Signed by Executive Officer
Location:Tiruppur
Date:2026.02.26 12:55:46